**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

E.A.No.4/2024 in E.P.No.2/2020 in O.S.No.27/2015 தேதி-29.01.2025

(P.W.1) - ஜெனி குமாரி

**1** மற்றும் **2** எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை

1. ராஜமணி என்பவரிடம் நான் இம்மனுவின் ம.சா.ஆ.4-ன்படி எத்தனை இன சொத்துக்களை வாங்குவதற்காக கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திகொண்டோம் என்றால் மொத்த சொத்துக்களும் வாங்குவதற்காக ஒப்பந்தம் ஏற்படுத்திகொண்டோம். மேற்படி சொத்தில் எத்தனை இன சொத்துக்களுக்கு நான் கிரைய ஒப்பந்தம் செய்தேன் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் 5 இன சொத்துக்களாகும். அவைகள் எந்த கிராமத்திற்குட்பட்டது மற்றும் அதன் புல எண், விஸ்தீரணம் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்சொன்ன கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்ட நாளில் ராஜமணிக்கு எவ்வளவு தொகை செலுத்தினேன் என்றால் ரூ.5 லட்சம் ஆகும். மேற்சொன்ன தொகையை வங்கி கணக்கு மூலமாகவா அல்லது காசோலை மூலமாக பரிவர்த்தனை செய்தேனா என்றால் ரொக்கமாக பரிவர்த்தனை செய்தேன். மேற்சொன் கிரைய ஒப்பந்தத்தில் எத்தனை ஆண்டுகளுக்குள் கிரையம் முடிக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளளது என்றால் 2 ஆண்டுகளாகும்.

2. மேற்சொன்ன 2 ஆண்டுகள் கால அவகாசத்திற்குள் நான் மொத்த தொகையை செலுத்தி கிரையம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. மெற்படி மொத்த கிரைய பத்திரங்கள் கிரைய ஒப்பந்த பத்திரங்கள் ஏற்படுத்திய தேதியிலிருந்து சுமார் 4 வருடங்களுக்குபிறகுதான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணங்கள் அனைத்தும் கிரைய ஒப்பந்தத்தின் நிபந்தனைகளுக்குட்பட்டு ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் மொத்தம் எவ்வளவு தொகைக்கு ஏற்படுத்தப்பட்டது என்றால் ரூ.20 லட்சத்திற்கு ஏற்படுத்தப்பட்டது. கிரையதொகை செலுத்தியதாக சொல்லியுள்ள நிலையில் அது என்னுடைய பணம் என்பதற்கான எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் கடைசியாக ரூ.1,95,000/-க்கு செலுத்தியதற்கான ஆவணமான வரைவோலை (Demand Draft) உள்ளது. ராஜமணி என்பவருக்கு கிரைய தொகை ஏதும செலுத்தாமல் ஏற்படுத்திக்கொண்ட போலி ஆவணம்என்றாலும் சட்டப்படி நிலைக்கதக்க ஆவணமல்ல என்றால் சரியல்ல.